ஜாமக்கோள் பிரசன்னம் உதாரண

விளக்கம் 68




கேள்வி?

85 ஏக்கர் பூமி வழக்கில் உள்ளது இந்த பூமி எடுத்து வழக்கை சரி செய்து வெற்றி பெற முடியுமா?

பதில்

இங்கு கேள்வி இடம் சார்ந்த பிரச்சனையை சுட்டிக் காட்டுகிறது மற்றும் வழக்கு சுட்டிக்காட்டுகிறது

இங்கு நாம் மிக முக்கியமாக கவனிக்க வேண்டியது செவ்வாயின் நிலையை பார்க்க வேண்டும்.. அதன்பின்பு நான்காம் பாவத்தையும். நான்காம் பாவாதிபதியின் நிலையும் கவனிக்க வேண்டும். இங்கு வழக்கு என்பதால்

எட்டாம் பாவத்தின் நிலையும் உதயத்தின் நிலையும் உதயாதிபதியின் நிலையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

பிரசன்ன நேரத்தின்படி உதயத்தை நோக்கி சனி வருகிறார். உதயத்தை நோக்கி சனி வந்தால் எந்த கேள்வி கேட்டாலும் அந்த கேள்வியாளர் அந்த சம்பவத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் போகலாம் .அல்லது தகுதி இல்லாத நிலையை குறிப்பிடலாம் அல்லது அவர் செய்யும் செயல் பயனற்றுப் போய்விடும்.

இது கேள்வியை பொறுத்து மேற் சொன்ன விஷயங்களை அணுகு வேண்டும்.

உதயாதிபதி ஆறாவது வீட்டில் கவிப்பில் உள்ளார் மற்றும் மாந்தியுடன் உள்ளது. உதயாதிபதி கவிப்பில் இருந்தால் நாம் மேற்கொள்ளக்கூடிய காரியங்கள் தோல்வியிலும் தகுதியற்ற நிலையும் ஏற்படுத்தும். மற்றும் நாலாம் அதிபதியும் புதன் அவரே ஆகிறார் இங்கு மாந்தி உடன் இருப்பதால்

இந்த சொத்து சம்பந்தமான விஷயங்களில் ஒரு மரணம் சார்ந்த விஷயமும் தொடர்பு இருக்கும் அல்லது இறந்தவர்களின் டாக்குமெண்ட் சார்ந்த பிரச்சனைகளும் இருக்கும்.

நாலாம் பாவம் தில் நீச்ச சுக்கிரன் இருப்பது நாலாம் பாவாதிபதி கவிப்பில் இருப்பது கேள்வியார் கேட்கும் கேள்வி 85 ஏக்கர் எடுத்து வழக்கு சால்வு செய்து வெற்றி பெற முடியாது. பூமி காரகன் செவ்வாய் ஒன்பதாம் பாவத்தில் இருப்பதால் பூமியில் எந்த தோஷமும் இல்லை இங்கு டாக்குமெண்ட் மற்றும் அனுபவ பாத்தியம் அனுபவ பாத்தியம் என்பது நான்காம் பாவத்தை குறிக்கும் இது உதயாதிபதியோடு கவிப்புடன் சம்பந்தப்பட்டிருப்பதால் கேள்வியாளருக்கு அது தகுதி இல்லாத நிலையை குறிப்பிடுகிறது எனவே இதற்கு மேற்கொண்டு பெரிய முயற்சி எடுத்து நேரத்தை வீணடிக்க வேண்டாம் வேறு நிலம் வேறு இடம் பார்ப்பது சிறந்தது என்று அவருக்கு நாம் அறிவுரை கூறியுள்ளோம்.

குறிப்பு:

நான்காம் பாவம் உதயம் இவை மாந்தியுடன் தொடர்பு கொண்டால் உயிரற்ற கேள்வியாக இருந்தால் அதில் மரணம் சார்ந்த விஷயமாக கருதும் பொழுது டெத் வாரிசு போன்ற செயல்கள் அங்கு கோளாறாக இருப்பதை சுட்டிக்காட்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

Selvam Astrologer Coimbatore

Call WhatsApp 9842780218